**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 03/2025**

Deposition of **PW- 1 (LW-1 )**

| Name | : | தங்கராஜ் | Father Name | : | தங்கவேலு |
|---|---|---|---|---|---|
| Village | : | நல்லம்பூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | சமையல் மாஸ்டர் |
| Religion | : | | Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14 th day of July 2025.

எதிரிகள் ஆஜர் . 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து சமையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 30.10.2024 ம் தேதி நான் எனது வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் இளவழகன், தேவா, கலியபெருமாள், அஜித், சூர்யா ஆகியோர் மாலை 06.30 மணியளவில் எனது வீட்டிற்கு வந்தார்கள். ஆஜர் 1வது எதிரி அஜித்தின் தங்கையை 30.10.2024 ம் தேதி நான் வயலுக்கு அழைத்ததாக ஆஜர் எதிரிகள் என்னிடம் கேட்டார்கள். அப்போது நான் அன்றைய தினம் ஊரில் இல்லை என்றும் 22.10.2024 ம் தேதியே எனது மனைவியின் அக்கா மகள் சடங்கிற்காக ஜெயங்கொண்டம் சென்றுவிட்டதாக சொன்னேன்.அதனால் ஆஜர் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். 01.11.2024 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நல்லம்பூரில் நான் கடையில் நின்றுகொண்டிருந்தபோது ஆஜர் 1 வது எதிரி என்னிடம் வந்து நான் வண்டியில் வரும்போது உதைத்து தள்ளியது நீதானே என்று கேட்டார், அதற்கு நான் இல்லை என்று சொன்னேன். அப்போது ஆஜர்கள் என்னை குச்சிகாரி மகனே, தேவுடியாள் மகனே என்று திட்ட ஆரம்பித்தார்கள், நீதான் வண்டியை உதைத்து தள்ளினாய் என்று சொல்லி ஆஜர்கள் எதிரிகள் நால்வரும் என்னை செங்கல்லாலும் கட்டையாலும் அடித்தார்கள். நான் வலி தாங்கமுடியாமல்

சத்தம் போடவும் அங்கிருந்தவர்கள் பிரச்சனையை சமாதானம் செய்தார்கள். நான் சம்பவ இடத்திலிருந்து வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். வலங்கைமான் அரசு மருத்துவமனையில் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டு மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். நான் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வலங்கைமான் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் போலீசாரிடம் நடந்த சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். ( புகார் வாக்குமூலம் **அ.சா. 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது). ஆஜர் எதிரிகள் என்னை தாக்கியதில் தலையில் இரண்டு காயங்களும் இடது பக்க விலா எலும்பில் அடிபட்டது. முதுகெலும்பிலும் அடிபட்டது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனக்கு எழுதப்படிக்க தெரியும் நான் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே குடியிருப்புகள் கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சைக்காக எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 10.00 மணிக்கு சென்றேன். மேல் சிகிச்சைக்காக வலங்கைமான் அரசு மருத்துவமனையிலிருந்து கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 11.00 மணிக்கு சென்றேன். கும்பகோணம் அரசு மருத்துவமனையில் எனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்ற விபரத்தை மருத்துவரிடம் கூறினேனா என்றால் கூறினேன். மருத்துவரும் அதை குறித்துக்கொண்டார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் செங்கல் மற்றும் கட்டையால் அடித்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாக்குமூலத்தில் கல் மற்றும் கட்டையால் அடித்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். செங்கல்லைதான் கல் என்று கூறினேன். எனக்கு கப்பிகல்லிற்கும் கருங்கல்லிற்கும் வித்யாசம் தெரியுமா என்றால் தெரியும். நான் கல்லால் தாக்கப்பட்ட விபரத்தினை மருத்துவரிடம் கூறினேனா என்றால் கூறினேன். மருத்துவர் அதனை

குறித்துக்கொண்டார். ஆஜர் 1வது எதிரியின் நண்பரின் தங்கையிடம் கடந்த 23.10.2024ம் தேதி தவறாக நடக்க முயற்சி செய்து வயலுக்கு வா என்று கூறியதால் முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கின் இளம்பிழையாளிக்கு எதிராக இளம்சிறார் நீதிக்குழுமத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இளம்சிறார் நீதிக்குழுமத்திலிருந்து இதுவரை எனக்கு சாட்சிக்கான அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்ன நாள் நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளின் மீதுள்ள முன்விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.14 18:59:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. CC.03/2025**

Deposition of **PW- 2 (LW-2 )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | விக்னேஷ் | Father Name | : | மோகன் |
| Village | : | நல்லம்பூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கோவில் சிற்பவேலை |
| Religion | : | | Age | : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10 th day of July 2025.

எதிரிகள் ஆஜர். 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கோவில் சிற்ப வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 01.11.2024 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நல்லம்பூர் கடைத்தெருவிலுள்ள கரிகாலன் காம்ப்லக்ஸ் எதிரே நின்று கொண்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் நால்வரும் அங்கு நின்று கொண்டிருந்த அ.சா. 1 ஐ கல்லாலும் கட்டையாலும் அடித்தார்கள். எதிரிகள் நால்வரும் தாக்கியதில் அ.சா. 1க்கு மண்டை உடைந்து இரத்தம் வந்தது. அ.சா.1ன் மனைவிக்கு நான் போன் மூலம் தகவல் சொன்னேன். சம்பவ இடத்தில் இருந்து அ.சா.1 சென்றுவிட்டார். அ.சா. 1 ஐ அவரது மனைவியும் உறவினரும் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். ஆஜர் எதிரிகள் சம்பவ சமயத்தில் அ.சா. 1 ஐ குச்சிகாரி மகனே, தேவுடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். ஆஜர் எதிரிகள் குறித்து பின்னர் கேட்டு தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

அ.சா. 1 எனது நண்பர். நான் கீழப்பூண்டியில் குடியிருந்து வருகிறேன். சம்பவயிடத்திற்கும் எனது வீட்டிற்கும் 3/4 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கரிகாலன் காம்ப்லக்ஸ் எந்த திசை நோக்கி உள்ளது என்றால் வடக்கு திசை நோக்கி உள்ளது. கரிகாலன் காம்ப்லக்ஸில் எத்தனை கடைகள் உள்ளது என்றால் 10 கடைகள் இருக்கும். 10 கடைகளும் வடக்கு திசை நோக்கி உள்ளதா என்றால் இல்லை. 5 கடைகள் வடக்கு திசை நோக்கி உள்ளது. மற்ற கடைகள் எந்த திசை நோக்கி உள்ளது என்றால் மேற்கு திசை நோக்கி உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே உள்ள சாலை எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி செல்கிறது என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது. சம்பவயிடத்தின் அருகே வீடுகள் மற்றும் வேறு வணிக நிறுவனங்கள் உள்ளதா என்றால் உள்ளது. சம்பவத்தின் போது நான் வீட்டில் இருந்தேன் எனக்கு போன் மூலம் தகவல் கிடைத்து நான் சம்பவயிடம் சென்றேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சம்பவம் நடந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. நான் அங்கு சென்று விசாரித்து தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரிகள் அ.சா. 1 ஐ எந்த கல்லால் தாக்கினார்கள் என்றால் உடைந்த செங்கல்லால் தாக்கினார்கள். சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் அ.சா. 1 எனது நண்பர் என்பதாலும் போலீசார் சொன்னதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 1 ன் மனைவியின் பெயர் என்னவென்றால் கவிப்பிரியா. அ.சா.1 ன் மனைவி சம்பவயிடத்திற்கு என்னுடன் வரவில்லை நான் தகவல் தெரிவித்த பிறகுதான் வந்தார். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அ.சா. 1 எனது நண்பர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.14 19:00:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 03/2025**

Deposition of **PW- 3 (LW-5 )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோவிந்தராஜ் | Father Name | : | ரெங்கசாமி |
| Village | : | நல்லம்பூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கூலி வேலை |
| Religion | : | | Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14 th day of July 2025.

எதிரிகள் ஆஜர். 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 ஐ தெரியும் அவர் எனது ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை பார்ததில்லை அவர்கள் குலக்குடியை சேர்ந்தவர்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அ.சா 1க்கும் குலக்குடியை சேர்ந்தவர்களுக்கும் சண்டை நடந்ததற்கு மறுநாள் நல்லம்பூரிலுள்ள பாய் கடைக்கு சென்றிருந்தேன், போலீசார் சண்டை நடந்த இடத்திற்கு விசாரணைக்காக வந்தார்கள். சண்டை நடந்தது எங்கே என்னவென்று கேட்டு கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ 2** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்னிடம் கையொப்பம் பெற்ற பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.14 19:00:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. CC.03/2025**

Deposition of **PW- 4 (LW-6 )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கருப்பையன் | Father Name | : | இருளன் |
| Village | : | நல்லம்பூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஆடு மேய்த்தல் |
| Religion | : | | Age | : | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14 th day of July 2025.

எதிரிகள் ஆஜர். 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து ஆடு மேய்த்து வருகிறேன். அ.சா. 1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சண்டை நடந்ததற்கு மறுநாள் நான் டீ குடிப்தற்காக நல்லம்பூரிலுள்ள டீ கடைக்கு சென்றேன். போலீசார் சம்பவயிடத்தை குறித்து விசாரித்தார்கள். போட்டோ எடுத்து கொண்டார்கள். சண்டை நடந்தது தொடர்பாக விசாரித்து கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ 3** ஆகும்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்னிடம் கையொப்பம் பெற்ற பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் போலீசார் படித்து சொன்னார்கள் கையொப்பம் செய்தேன்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.14 19:00:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.